வீவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

4 சைவசமய பாடப்பரீட்சை : 2020

தரம் நான்கு



nselva.com

காலம் அளவு } 45 நிமிடம்

புள்ளிகள் : 100

இல. 1816

மாணவர் சுட்டெண்:

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக

1. இந்திரன் கண்ணனின் கர்வத்தை அடக்கினான். ( )
2. கல்வித் தெய்வம் சரஸ்வதி ஆவார். ( )
3. சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள் தைப்பொங்கல் ஆகும். ( )
4. மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனின் முதலமைச்சராக விளங்கினார். ( )
5. கஜமுகாசுரனை அழிப்பதற்காக சிவபெருமான் முருகனை தோற்றுவித்தார். ( )

(5 x 1 புள்ளிகள்)

2. மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக

1. பிரம்ம தேவரின் தலையில் குட்டி அவரைச் சிறை வைத்தவர்
   1. சிவபெருமான
   2. வைரவர்
   3. வீரபாகு
   4. முருகப்பெருமான்

2. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர்
   1. கண்ணகி
   2. திலகவதியார்
   3. வீரமாதேவி
   4. புனிதவதி

3. ''முத்தினெறி அறியாத" என்ற திருப்பதிகத்தைப் பாடியவர்
   1. அப்பர்
   2. சுந்தரர்
   3. மாணிக்கவாசகர்
   4. திருமூலர்

4. ஒரு வைகாசி மாதத்துப் பூச நாளிலே இறையடி சேர்ந்தவர்
   1. நமிநந்தியடிகள்
   2. ஔவையார்
   3. அபிராமிப்பட்டர்
   4. ஆறுமுகநாவலர்

5. நாம் கோயிலை அண்மித்ததும் முதலில் வணங்க வேண்டியது
   1. பலிபீடம்
   2. விநாயகர்
   3. நந்தி
   4. கோபுரம்

(5 x 1 புள்ளிகள்)

3. "அ" பகுதிக்குப் பொருத்தமானவற்றை "ஆ" பகுதியிலிருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

"அ"		"ஆ"
1. இரணியன்	( )	1. குதிரை
2. கண்ணன்	( )	2. அன்பு
3. பிள்ளையார்	( )	3. அசுரன்
4. திருவாதவூரர்	( )	4. புல்லாங்குழல்
5. தண்ணளி	( )	5. அறுகம்புல்

(5X2= 10 புள்ளிகள்)

4. பொருத்தமான சொல்லைக் கூட்டினுள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டினுள் எழுதுக.

எலி	சந்திரன்	நிறைகுடம்	அபிராமி அம்மை	சூரியன்	திருவாசகம்

1. பட்டர்..... மீது அளவற்ற பக்தி கொண்டவர்.
2. பஞ்சபுராண வரிசையில் தேவாரத்தை அடுத்து ..... பாடப்படும்.
3. வரவேற்பு வைபவங்களின் போது வீட்டு வாயிலில் ..... வைக்கிறோம்.
4. ..... விளக்கின் திரியைத் தற்செயலாகத் தூண்டி விட்டது.
5. பிள்ளையாரின் நடனத்தைப் பார்த்துச்..... சிரித்தான்.

(5X2= 10 புள்ளிகள்)

5. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. புராதன காலத்தில் திருத்தம்பலேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்பட்ட ஆலயம் எது?

   .....

2. சிவபெருமானை வழிபடுஞ் சமயத்துக்குப் பெயர் யாது?

   .....

3. தோப்புக்கரணம் போட்டு வழிபடப்படும் கடவுள் யார்?

   .....

4. இறைவன் வாழும் இடம் எது?

   .....

5. சக்தி என்னுஞ் சொல்லுக்குப் பொருள் யாது?

   .....

6. சரியைத் தொண்டுகள் என்றால் என்ன?

   .....

7. பஞ்ச பூதங்கள் எவை?

   .....

8. சகலகலாவல்லி மாலை யாரால் பாடப்பட்டது?

.....

9. படைத்தல் தொழில் செய்பவர் யார்?

.....

(9X2= 18 புள்ளிகள்)

6. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டது என எழுதுக?

1. ''குதிரைகள் எங்கே''?

யாரால்..... யாருக்கு.....

2. ''எங்கே வேதத்தை ஒதுங்கள் பார்க்கலாம்!''

யாரால்..... யாருக்கு.....

3. ''உங்கள் மன்னரால் யாதொரு பயனும் இல்லை நான் வரப்போவதில்லை!''

யாரால்..... யாருக்கு.....

4. ''எனக்கு விளக்கேற்றுவதற்கு நெய் தாருங்கள்''

யாரால்..... யாருக்கு.....

(4X3= 12 புள்ளிகள்)

7. பின்வருவன பற்றி ஐவைந்து வாக்கியங்கள் எழுதுக.

சிவபெருமான்

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....

(5X2= 10 புள்ளிகள்)

காரைக்கால் அம்மையார்

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....

(5X2= 10 புள்ளிகள்)

8. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டை வரிக்கிரமமாக எழுதுக.

1. "சடையாய் எனுமால்....."
2. "ஆதியாய் நடுவும்....."
3. "மண்ணில் நல்ல வண்....."
4. "மாசில் வீணையும் ....."

1. .....

.....

.....

.....

(10 புள்ளிகள்)

2. .....

.....

.....

.....

(10 புள்ளிகள்)